**ஹட்டன் - திக்ஓயா நகர சபை**
**நுவரஎலிய மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தம்பர் 13 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.
.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, ஹட்டன் - திக்ஓயா நகர சபையின் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) இயந்திரங்கள் மற்றும் இயந்திரங்களின் கீழ் எடுக்கப்படாத ரூபா 251,950 பெறுமதியான நானாவித சொத்துக்களுக்குரிய 181 பொருள் அலகுகள் இயந்திரம் மற்றும் இயந்திராதிகளின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) தளபாடங்கள் மற்றும் பொருத்திகளின் எடுக்கப்படாத ரூபா 213,147 பெறுமதியான நானாவித சொத்து விடயங்களுக்குரிய 602 பொருள் அலகுகள், தளபாடங்கள் மற்றும் பொருத்திகளின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 06 ஆண்டு முதல் 25 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த பெறவேண்டியிருந்த 04 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 13,119,324 தொகையாக இருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 1 ஆண்டு முதல் 9 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த ரூபா 306,000 ஆன 26 செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

**தேவையான தகவல்கள்** சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 11,359,537 ஆன 04 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

**1.3.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | நகர சபைச் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் 36 (உ) ii பிரிவு | சமலகம பிரதேசத்தில் அமைந்துள்ள 46.51 பேர்ச் அளவிலான 9 காணித் துண்டுகள் நீண்ட கால குத்தகைக்கு வழங்கும் போது அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | அரச காணி தொடர்பாக கட்டளைச் சட்டம் 217(2) (vi)ஆம் பிரிவு | குத்தகைக்கு வழங்கப்படும் காணி 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பீடு செய்து வாடகையை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 54,850,010 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 47,050,988 ஆகக் காணப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

சபை வங்கியொன்றில் பேணிச் செல்லும் கணக்கொன்றில் 2017 ஆம் ஆண்டின் ஒவ்வொரு மாதத்திலும் ரூபா 32,000,000 இற்கு மேற்பட்ட பணமொன்று மீதியாக இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் இப்பணத்தை பொருத்தமான வகையில் பயன்படுத்துவதற்கு அல்லது சாதகமான வகையில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் அத்தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் ஒப்பிடும் போது இணக்கமின்மைகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

| வருமான மூலம் | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2016 மதிப்பிடப்பட்ட வருமானம | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி மற்றும் வரி | 12,250,000 | 17,671,816 | 15,285,476 | 5,030,602 | 10,200,000 | 6,765,520 | 7,469,615 | 2,527,852 |
| வாடகை | 20,120,000 | 14,692,519 | 14,171,292 | 4,297,588 | 18,204,700 | 16,205,483 | 15,817,168 | 3,521,653 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 15,275,000 | 2,318,939 | 2,344,939 | 9,000 | 10,581,000 | 1,797,032 | 1,816,042 | 26,000 |
| ஏனைய வருமானம் | 18,676,000 | - | 20,486,608 | - | 14,081,000 | - | 19,364,836 | - |

### 2.3.2 வீதவரியும் வரிகளும்

**(அ) வீதவரி**

மீளாய்வாண்டின் சனவரி 01 இல்உள்ளவாறு காணப்பட்ட ரூபா 2,527,852 ஆன நிலுவை வீத வரி தொகையில் ஆண்டில் ரூபா 1,046,079 அதாவது 41 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்த நிலுவை தொகையில் ரூபா 1,481,773 தொகை ஆண்டின் இறுதியின் போது அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) நில வாடகை**

மீளாய்வாண்டின் சனவரி 01 இல்உள்ளவாறு காணப்பட்ட ரூபா 841,718 ஆன நிலுவை தொகையில் ஆண்டில் ரூபா 368,488 அதாவது 43 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்த நிலுவை தொகையில் ரூபா 473,230 தொகை ஆண்டின் இறுதியின் போது அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 கடை வாடகை

மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 2,377,004 ஆன நிலுவை தொகையில் ஆண்டில் ரூபா 856,755 அதாவது 36 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்த நிலுவை தொகையில் ரூபா 1,520,249 தொகை ஆண்டின் இறுதியின் போது அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 ஏனைய வருமானம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் விளம்பர அறிவித்தல் காட்சிப்படுத்துவதற்கான கட்டணங்கள் அறவிடுவதற்குரிய உபவிதிகள் பிறப்பிக்கப்பட்டிருகாததுடன் அந்த விளம்பர அறிவித்தல்களுக்காக 2017 ஆம் ஆண்டின் கட்டணங்கள் அறவிடுவதற்காக அறிவித்தல் விடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2017 சனவரி முதல் செப்தெம்பர் வரையான காலப்பகுதியில் விளம்பரக் காட்சிப்படுத்தல் கட்டணங்களாக ரூபா 97,800 ஆக அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.5 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 15,937 தொகையும் முத்திரைக் கட்டணங்களாக ரூபா 25,091,500 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 2.4 மிகை விதிப்புக்கள்

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 அதிகாரம்) 182(1) பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பொறுப்புச் சொல்ல வேண்டிய நபர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகை விதிப்புக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த மிகை விதிப்புக்களின் பெறுமதி ரூபா 7,924 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், சுகாதாரம், பொது உபயோக சேவைகள் மற்றும் பொதுப் வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நல விவகாரங்கள், வசதிகள் மற்றும் நலன்கள் ஆகிய சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) செயற்திட்டங்களை நிறைவேற்றுதல்**

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் சபை நிதியத்தை பயன்படுத்தி செயற்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 25,229,000 மதிப்பீட்டு செலவினமான 46 செயற்திட்டங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. எனினும், ரூபா 14,299,000 மதிப்பிடப்பட்ட செலவினமான 21 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

2017 ஆம் ஆண்டின் செப்தெம்பர் 10 ஆந் திகதி 75 கொங்கிரீட் குப்பை தொட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 138,750 செலவிடப்பட்டிருந்தது. சபையின் திண்மக்கழிவு பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் கீழ் இந்த கழிவுப்பொருள் தொட்டிகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 மார்ச் 22 ஆந் திகதி அளவிலும் 67 கழிவுப்பொருள் தொட்டிகள் சபையின் வாகன வளவில் வைக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக நகர பிரதேசங்களில் கழிவுப்பொருள் சேகரிக்கும் அளவு குறைத்துக் கொள்ளும் இயலுமை இல்லாமல் போவதாக அவதானிக்கப்பட்டது.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

நிலைபேரான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் தொடர்பாக நகர சபை அறிந்துகொள்ளாததன் காரணமாக அது தொடர்பில் எந்தவொரு செயற்பாடும் மீளாய்வாண்டில் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

(அ) 1987 - 2017 காலப்பகுதிக்குரிய நானாவித முற்பணம் ரூபா 452,595 மற்றும் 2008 - 2010 காலப்பகுதிக்குரிய நிர்மாண வேலை முற்பணம் ரூபா 2,755,913 ஆக மொத்த முற்பணம் ரூபா 3,208,508 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாமல் இருந்தது. இம்முற்பணங்களுக்குரிய ஏனைய தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) சபைக்குரிய 14 வாகனங்களுக்குரிய 2017 ஆம் ஆண்டின் ஓட்டக்குறிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமல் இருந்ததுடன் இந்த 14 வாகனங்களுக்காக 2017 சனவரி முதல் திசெம்பர் வரையான காலப்பகுதியில் எரிபொருளுக்காக ரூபா 5,316,372 தொகையும் திருத்த வேலைகளுக்காக ரூபா 606,973 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. ஓட்டக் குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்படாமையால் இந்த

எரிபொருள் கடமை செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட செலவினமா என கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் 11 பதவிகளில் காணப்பட்ட 33 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

**3.4 தொழிற்பாட்டு செயற்திறமையின்மை**

(அ) சபைக்குரிய 1.7 பேர்ச் அளவிலான காணித் துண்டொன்று உடன்படிக்கையொன்றுக்கு வராமல் நீண்டகால குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது திருப்திகரமான கலி சேவையொன்றை பேணிச் செல்லாமல் இருந்ததுடன்கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. 2017 சனவரி, பெப்ரவரி, மே மற்றும் திசெம்பர் ஆகிய மாதங்கள் தவிர ஏனைய மாதங்களில் எவ்வித சேவையொன்றும் அதிகாரப் பிரதேசத்தின் மக்களுக்கு வழங்கப்படாதிருந்ததுடன் அவ்வாறு முறைப்படி அச்சேவையை நடாத்திச் செல்லாமை காரணமாக சபைக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

**3.5 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

(அ) ரூபா 1,300,000பெறுமதியான மஹேந்திரா வகையான கெப் வண்டியொன்று 04 ஆண்டுகளாக ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் திருத்தியமைத்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 1,000,000 பெறுமதியான வீதி பதப்படுத்தும் இயந்திரம் 11 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் ஒப்பீடு செய்த போது 5 வருமான விடயங்களில் 21 சதவீதம் முதல் 86 சதவீதம் வரையும் 5 செலவு விடயங்களில் 19 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமாக கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்**

மீளாய்வாண்டினுள் 02 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| **முறைமைகள்** | **குறைபாடுகள்** |
| --- | --- |
| ----------------------- | ------------------------ |
| கணக்கீடு | கணக்குப் புத்தகங்கள் நாளதுவரையாக்கப்படாமை மற்றும் வகைப்படுத்தல் வழுக்கள் காணப்பட்டமை. |
| சொத்துக்கள் | குத்தகைக்கு வழங்கும் போது உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படாமை, அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமை மற்றும் மதிப்பீடு செய்யப்படாமை. |
| இருப்புக்கள் | பதிவேடுகள் பேணப்படாமை |
| கடன்பட்டோர் | அறவிடப்பட வேண்டிய பணம் அறவிடப்படாமை |
| வருமானம் | நிலுவை வருமானம் அறவிடப்படாமை |